DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலகிருஷ்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வேலுச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/08/2024

எதிரி ஆஜர்

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பாச்சலூர் வடகாட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். 2010 ம் வருடம் 28 ம் தேதி எனது அப்பா வேலுச்சாமியை ராஜேந்திரன் அடித்துவிட்டதாக பெருமாள்சாமி எனக்கு தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு உடனடியாக வந்து எனது அப்பா வேலுச்சாமியை ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். நான் ஐந்து நாட்கள் கழித்து சம்பவம் தொடர்பாக ஒட்டன்சத்திரம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். **புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் எனது அப்பா வேலுச்சாமியை அடித்த ராஜேந்திரன் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.14 17:16:45 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/08/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate  At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | வேலுச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | முத்தப்பகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/08/2024

எதிரி ஆஜர்

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பாச்சலூர் வடகாட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்கள் இருக்கும். மாலை 3.00 மணி இருக்கும். பல வருடங்கள் ஆனதால் எனக்கு தேதி, நேரம் சரியாக ஞாபகம் இல்லை. நான் ரோட்டில் ஆடு மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரி ராஜேந்திரன் காட்டிற்குள் ஆடுகள் சென்றதற்காக ஆஜர் எதிரி ராஜேந்திரன் என்னை கையாலும், செருப்பாலும் அடித்தார். அதில் எனக்கு மூக்கில் ரத்தம் வந்துவிட்டது. எனதுமகன் பாலகிருஷ்ணன் என்னை ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**இல்லை.**

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.14 17:16:52 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/08/2024

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 15/2019

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சின்னத்துரை | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருப்பணகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 14/08/2024

எதிரி ஆஜர்

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் கோட்டைவழியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்கள் இருக்கும் நான் வேலைக்கு சென்றுவிட்டு வேலுச்சாமி இரண்டு மாடு இரண்டு ஆடு வைத்து மேய்த்துக்கொண்டு இருந்தார். ஆஜர் எதிரி ராஜேந்திரனின் காட்டிற்குள் வேலுச்சாமியின் ஆடு நுழைந்துவிட்டதால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு தகராறு நடந்துள்ளது. வேலுச்சாமியை ராஜேந்திரன் அடித்துவிட்டதாக வழியில் வந்தவர்கள் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

ஆஜர் எதிரி எனக்கு உறவினரா என்றால் ஆமாம். எனது உறவினர் தான். கடந்த 02.10.2008 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் வேலுச்சாமி என்பவர் இரண்டு மாடுகள் மற்றும் 2 வெள்ள ஆட்டு குட்டிகள் மேய்ச்சலுக்காக ஒட்டன்சத்திரம் டூ

பாச்சலூர் செல்லும் சாலை ஓரத்தில் மேய்த்துக்கொண்டிருந்த போது வெள்ள ஆட்டு குட்டிகள் ஆஜர் ராஜேந்திரன் என்பவர் தோட்டத்திற்கு சென்றுவிட்டதால் எதிரி ராஜேந்திரன் வேலுச்சாமியை தகாத வார்த்தைகளால் பேசி கீழே தள்ளிவிட்டார் என்றும், காலால் ஏறி மிதித்து செருப்பால் அடித்தார் என்றும், கொலை மிரட்டல்விடுத்தார் என்றும், அதனால் வேலுச்சாமிக்கு வலது தோள்பட்டை வயிறு, இரண்டு கால்கள் ஆகியவற்றில் ஊமைக்காயங்கள் ஏற்பட்டது என்றும், நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த பெருமாள் என்பவரும் வேலுச்சாமியின்மகன் பாலகிருஷ்ணனுக்கு தகவல் சொல்லி அவர் வந்தவுடன் வேலுச்சாமியை பாலகிருஷ்ணன் ஒட்டன்ச்சதிரம் அரசு மருத்தவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றும், சம்பவம் தொடர்பாக பாலகிருஷ்ணன் ஒட்டன்சத்திரம் காவல்நிலையத்திற்கு புகார் அளித்தார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.14 17:16:59 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 14/08/2024